[1974 சனவரி 21

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) தற்போது மதிய உணவுத் திட்டத்திற்கு பாடசாலை நிர்வாகி கோரியுள்ள நிதியுதவி அரிசன நல இயக்குநரின் பரிசிலனையில் இருக்கிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, முழு நேரமாகத் தங்கி அங்கே படிக்கிற மாணவர்களுக்கு வேண்டிய உணவு, உடை ஆகியவைகளுக்கு அவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆனால் மதிய உணவு பற்றி மட்டும் பரிசிலிக்கப்படுகிறது. ஒரு விடுதியாக்கி, அவர்களுடைய மற்ற கோரிக்கைகளும் பரிசிலிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, அவர்கள் கோரிக்கை பாடசாலையாக வர வேண்டுமென்பதுதான். அதற்குரிய தொகையான ரூபாய் 25,000 ஐக் கட்டினால்தான் அது ஒரு பள்ளியாக ஏற்றுக் கொள்ளப்படுமென்று கல்வித் துறை விதிகளில் இருக்கிறது. அதற்கு விதி விலக்கு தரப்பட்டிருக்கிறது. மேலும் மாணவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, ஆசிரியர்களுக்கு வேண்டிய ஊதியம் இவைகளையும் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பாடசாலை அங்கிகாரம் செய்யப்பட்ட பிறகு, ஆசிரியர்கள் ஊதியம் போன்றவை தரப்படும். இப்போது அவர்களுக்கு நலத்துறை மூலமாக மதிய உணவு தரப்படும் நிலைமைகள் இருப்பதால், அது இன்றைக்கு நலத் துறை இயக்குநர் பரிசிலனையில் இருக்கிறது.

Special Coaching for Scheduled Caste Candidates to appear for Service Commission Examination

*21 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government conducted classes in various centres to coach Scheduled Castes candidates for Group IV Services Examination of the Tamil Nadu Public Service Commission; and

(*b*) if so, the number of such centres and the number of candidates coached during 1972–73;

(*c*) whether any remuneration was given to the teachers who were appointed as tutors in those centres; and

(*d*) if so, the details thereof?

1974 சனவரி 21]

அரசுப் பணிகள் தேர்வில் கலந்து கொள்ள அரிசன மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகம் நடத்திவரும் IV வது பிரிவு அரசுப் பணிகள் தேர்வில் கலந்து கொள்ள, அரிசன வகுப்பு மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியளிக்கும் பொருட்டுப் பல்வேறு நிலையங்களில் வகுப்புகளை அரசு நடத்தி வந்ததா?

(இ) ஆமெனில், 1972-73-ல் அத்தகைய பயிற்சியளித்து வந்த நிலையங்கள் எத்தனை? பயிற்சி பெற்ற மாணவர்கள் எத்தனை பேர்?

(உ) அந்த நிலையங்களில் நெறிமுறை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருந்தவர்களுக்கு ஊதியம் ஏதேனும் வழங்கப்பட்டதா?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) பயிற்சி நிலையங்கள்-22. பயிற்சி பெற்றோர்: சிறுவர் 309, சிறுமியர் 35.

(உ) & (எ) பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்களுக்கு மேற்பார்வைப் படியாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சிப் பள்ளியிலும் நியமிக்கப்பட்ட இரண்டு உதவி ஆசிரியர்களுக்கு ரூபாய் 300-15-20-500 என்ற சம்பள விகிதத்தில் நடைமுறையில் அங்கீகரிக்கப்பட்ட வழக்கமான படிகளுடன் ஊதியம் வழங்கப்படுகிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, 2—7—1973 அன்று தொடங்கப்பட்ட வகுப்புகள் 1—12—1973 உடன் முடிந்தும்கூட, ஆசிரியர்களுடைய சிறப்பு ஊதியமானது வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அது குறித்து எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவர்களுக்குச் சிறப்பு ஊதியம் தரப்படவில்லை என்ற புகார் வந்ததாக எனக்குத் தெரியவில்லை. இங்குள்ள கேள்வி எந்தெந்த வகையில் அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள், எப்படிப்பட்ட திட்டம் என்பதுதான். சிறப்பு ஊதியம் தரப்படவில்லை என்ற தகவல் எனக்கு வரவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, சிறப்பு ஊதியமானது ரூபாய் 50-லிருந்து 75-ஆக உயர்த்தப்படுமென்ற அலுவல் குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன். அதன்படி அவர்களுக்கு அளிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்னாலேயே அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

It is better to put a separate question to get the answer from the Minister.

THIRU K. S. GANAPATHY: Sir, there is a specific order regarding that.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, 45 ரூபாய் தான் இப்போது தரப்பட்டு வருகிறது. அது உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறதா என்பதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து சொல்லப்படும்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். 50 ரூபாய் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை 75 ரூபாயாக உயர்த்தவேண்டுமென்று குறிப்பு உள்ளது.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, 45 ரூபாய்தான் அளிக்கப்படுகிறது. 75 ரூபாய் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கலாம். இப்போது 45 ரூபாய்தான் தரப்பட்டு வருகிறது.

Teachers Serving in Harijan Welfare Schools of North Arcot District.

* 22 *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that salaries of the teachers serving in Harijan Welfare Schools of North Arcot District have not been paid for the months of July and August 1973; and

(*b*) if so, the reasons therefor?